## சேலம் தொன்போஸ் கோ அன்பு இல்ல மூன்றாம் ஆண்டு நிறைவு விழா.

### 1991 - 92 சிறப்பு உரிய ஆண்டறிக்கை

சேலம் தொன்போஸ்கோ அன்பு இல்லத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்புற கொண்டாடும் இந்த நன்நாளில் அதன் இயக்குனர் என்ற முறையில், இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள சேலம் ஆயர் மேதகு மைக்கேல் போஸ்கோ துரைசாமி அவர்களையும் வருகை தந்துள்ள ஏனைய சிறப்பு விருந்தினர்களையும், பொது மக்களையும் வரவேற்று, மகிழ்வோடு சமர்ப்பிக்கின்ற ஆண்டறிக்கை.

சேலம் தொன்போஸ்கோ அன்பு இல்லம் கடந்த மூன்றாண்டுகளாக தெரு ஓரச்சிறார்களுக்கு ஆற்றும் சேவையினை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பிறப்புகளில் மனித பிறப்பு என்பது மிக உயர்ந்த பிறப்பு. இந்தபிறப்பில் மனித மாண்புகள் மிக உயர்ந்தவையாக கருதப்படுகின்றன. ஆனால் அன்றாட வாழ்வில் மனித மாண்புகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறியே! இன்றைய நடைமுறை வாழ்வில் மனித மாண்புகள் மிக மிக மோசமாக நசுக்கப்படுகின்றன. சமுக, பொருளாதார, கல்வி, அரசியல் மற்றும் கலாச்சாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாக வறுமைக்கோட்டிற்கும் கீழ்நிலையில் உள்ள மக்களில் இளம் வயதுடைய இச்சிறார்களின் வாழ்வில் மனித மாண்புகள் அழிக்கப்பட்டும், நசுக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வருவது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. இவர்கள் தங்களது வாழ்வை வளமாக்க வாய்ப்பில்லாமலும், தடுக்கப்பட்ட, மற்றும் மறுக்கப்பட்ட நிலையிலும், வாழ்கின்ற இத்தன்பச் சூழலில் இருந்து இவர்களை மீட்கவும், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சேவை நிறுவனமே, சலேசியர்களால் நடத்தப்படுகின்ற இந்த அன்பு இல்லமாகும்.

இத்தகைய இளம் உள்ளங்களுக்கு கட்டுப்பாடு, தன்னம்பிக்கை கருணை, அன்பு, பாசம், அரவணைப்பு, கல்வி, தொழிற்பயிற்சி, விளையாட்டு, சுகாதாரம் போன்றவற்றுடன் தங்க வசதிகள் செய்து கொடுத்து, தகுந்த வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுத்தால் இவர்கள் வளமான வாழ்வு பெற முடியும். என்ற நோக்கத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் பணிகளை இந்த இல்லம்

(1) சுகாதாரம் : "நல்வுடலில் நல்லான்மா" என்ற தொன்போஸ் கோவின் எண்ணத்தின் அடிப்படையில் சுகாதார வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தங்களையும், தங்கள் சுற்றுப்புறத்தையும் சுப்புரவாக வைத்துக்கொள்ள மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

(2) முதலுதவி/நோய் பராமரிப்பு/சத்துணவு திட்டங்கள் : சிறிய காயங்களையும், நோய்களையும் குணப்படுத்த முதலுதவி வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. நோய்வாய்ப்படுகின்ற மாணவர்களுக்கு இலவச சிகிச்சையளிக்க, தூய மரியன்னை மருத்துவமனை சகோதரிகள் எப்பொழுதும் உதவுகின்றார்கள். என்பதை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். அவசரத் தேவையெனில் மற்ற தனியார் மருத்துவமனைக்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறார்கள். மாதத்திற்கு ஒரு சில தினங்களில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இரவு உணவும் வழங்கப்படுகின்றது.

(3) முறைச்சாராக்கல்வி: அனைத்து மாணவர்களும் எழுதவும், படிக்கவும், கற்க வேண்டி வாய்பளிக்கப்படுகின்றது. திரு. ஜோசப் ஆசிரியர் அவர்கள் அப்பொறுப்பினை ஏற்று திறம்பட 3 ஆண்டுகள் சேவை செய்து வருகின்றார்கள் என்பது பாராட்டுக்குரியது. ஒரு சில மாணவர்கள் மற்ற பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, முறையாக கல்விபயில ஏற்பாடுகள் செய்து தரப்பட்டுள்ளது.

(4) பொழுதுபோக்கு: சென்னையில் 10.12.91-ல் நடைபெற்ற தெரு ஓரச் சிறுவர்களுக்கான கருத்தரங்கில் சுமார் 50 மாணவர்கள் இரண்டு நாட்கள் பங்கேற்று பயனடைந்தனர். அஃது அவர்களுக்கு உல்லாச பயணமாகவும், அமைந்தது. மாதத்திற்கொருமுறை மாணவர்களை சேலத்தைச் சுற்றியுள்ள கந்தகிரி, குமரகிரி, போன்ற இடங்களுக்கு உல்லாசப்பயணமாக செல்லப்பட்டு மகிழ்விக்கப்படுகின்றனர்.

தீபாவளி, கிறுஸ்துமஸ் போன்ற சமயங்களில் போட்டிகள் நடத்தி அவர்களுக்கு பரிசுகளும், உடைகளும் வழங்கப்பட்டுள்ளது. வாரம் ஒருமுறை மாணவர்களை தியேட்டர்களுக்கு அழைத்துச் சென்று திரைப்படமும், இரண்டு முறை

இல்லத்திலேயே வீடியோ மூலம் படமும் போட்டுக் காண்பிக்கப்படுகின்றது.

(5) <u>ஆலோசனை வழங்குதல், மறு வாழ்வுப்பணி</u>; திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் படிக்கின்ற சகோதரர்கள் ஜார்ஜ், மாறன் ஆகியோர் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இல்லத்திற்கு வந்து மாணவர்களை சந்தித்து சொற்பொழிவாற்றியும், அறிவுரைகள் நல்கியும் மாணவர்களுக்கு உதவிவருகின்றார்கள். தலைமை பண்புகளைப் பற்றிய கருத்தரங்கு 4.10.91-ல் சென்னையில் நடைபெற்றது. அன்புஇல்லம் சிறுவர்கள் 5 பேர்கள் அதில் பங்கேற்றனர். மாணவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் நோக்கில் எம்.ஆர்.எப். நிறுவனத்தாரும், சில உணவு விடுதி முதலாளிகளும், சேலம் பேர்லஸ் சமுக சேவை சங்கமும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு (தந்து) உதவி வருகின்றது. மாணவர்களுக்கு, இறையுணர்வு ஊட்ட, தினந்தோறும், இரவு ஜெபமும், முக்கிய நாட்களில் பொது வழிபாடும் நடத்தப்படுகின்றது. குடிப்பழக்கம், கஞ்சா போன்ற தீய பழக்கங்களில் இருந்து விடுபட மாணவர்களுக்கு வீடியோ படம் போட்டு காண்பித்து அறிவுரைவழங்கப்படுகின்றது.

(6) <u>தங்குமிடம்</u>; மாணவர்கள், பாதுகாப்புடன் தங்குவதற்கும் சமூக விரோதிகளிடமிருந்து விடுபடவும், நல்ல தங்கும் விடுதி உள்ளது. சில மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி மீண்டும் தங்கள் பெற்றோர்களுடன், சேர்ந்து வாழ அன்பு இல்லம் உதவுகின்றது.

(7) <u>சட்ட ஆலோசனை</u>; சில இடையூறுகளிலும், குழப்பங்களிலும், சிக்கியுள்ள இளைஞர்களை போலீஸ்காரரிடமிருந்தும், தலையாரிடமிருந்து அவர்களை விடுவிக்க அன்பு இல்லம் சட்ட ஆலோசனையும் வழங்கி உதவுகிறது.

(8) <u>மற்ற சேவைகள்</u>; அன்பு இல்ல மாணவர்களுக்கு மட்டும் இல்லாமல், அதன் சுற்று புறங்களில் உள்ள ஏழ்மை நிலையில் உள்ள சிறுவர்களுக்காக இரண்டு இடங்களில் இரவு பள்ளிகள் (சகோ. பால், ரோ-சைமன் அவர்களால்) நடத்தப்படுகிறது. அவர்களுக்கு அவ்வப்போது விளையாட்டுப்போட்டிகள், கருத்தரங்குகள் நடத்தி பரிசுகள் அளித்து மகிழ்விக்கின்றோம்.

மற்றும் இல்லத்தின் இயக்குநர் அருட்தந்தை மைக்கேல் தாமஸ், சகோதரர்கள் வின்சென்ட் தம்புராஜ், அருள் தாஸ், ஆகியோர் அவ்வப்போது

வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள். இப்பணியினை சிறப்புற செய்வதற்கு
உதவிய பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், நிறுவனங்களின் பொறுப்பாளர்கள்
அருட் தந்தையர்கள், அருட் சகோதரர்கள், சகோதரிகள், பெற்றோர்கள்,
நண்பர்கள், மாணவமாணவியர்கள் மற்றும் அரசாங்க பொறுப்பாளர்கள்
சலேசிய நிறுவனங்களின் முன்னாள் மாணவ சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும்
எனது மனம் நிறைந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு,
இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடை பெற இவண் வருகை தந்துள்ள ஆயர்
அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும், நாட்டிய நடன நிகழ்ச்சிகளுக்கு
உறுதுணையாக இருக்கின்ற நண்பர் ஸ்ரீசம்பத்குமார் அவர்களுக்கும் அவர்களது,
மாணவிகள், அவர்களது பெற்றோர்கள், மற்றும் பெரியோர்கள், பொது
மக்கள் அனைவருக்கும், நாடகக் குழுவினர்க்கும், எனது நன்றியை உரித்தாக்கி
உங்களது ஆதரவு என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையில் இறைவனின் ஆசீர் வேண்டி
இவ்வாண்டறிக்கையை முடிக்கின்றேன்.

நன்றி.

இவண் Fr. Michael Thomas sdb.

இயக்குநர்

சேலம் தொன்போஸ்கோ அன்பு இல்லம்

சேலம் - 7.